முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற இடம், கல்லூரி அமைப்பதற்கு உகந்ததாக இல்லாமல், மலைப் பகுதியாக, மேடு, பள்ளமாக இருக்கிறது. வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கு இடம் மட்டும் போதாது. அந்த இடம் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு ஏதுவாக, பயிர் செய்வதற்கு உரிய விளைநிலமாக இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற நிலப்பகுதி சரியான பகுதியாக இல்லை. எனவே, வேறு பகுதியை நாங்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். பிற்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**83—**

## தொழிற்சாலை

***3149—திரு. கோ. ஐயப்பன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் தொகுதியில் தொழிற்சாலை தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையினை இப்பேரவைக்கு அளிக்க விரும்புகிறேன்.

(அ) மற்றும் (ஆ) கடலூர் தொகுதியில் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில்

*2023 மார்ச் 31*]

*இல்லை என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள்.*

**திரு. கோ. ஐயப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் முதல்வர் அவர்களையும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் தொழிற்பேட்டை 1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும், தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக 1996—ல் பொறுப்பேற்ற காலத்தில், சிப்காட் தொழிற்பேட்டைக்கு நேரடியாக வருகை செய்து,* TANFED *நிறுவனங்களையெல்லாம் ஆய்வு செய்து, சிப்காட் வளாகத்தை விரிவாக்கம் செய்து தந்தார்கள். மாண்புமிகு தலைவர் தளபதியார் அவர்கள், 2006—2011—ல் கடலூர் சிப்காட் வளாகத்திற்கு வருகை தந்து,* Chemplast *நிறுவனத்தை அங்கே ஆரம்பித்து வைத்து பெருமை சேர்த்தார்கள்.*

*மாண்புமிகு அமைச்சர் அவர்களே, ஆங்கிலேயர் காலத்திலிருந்து கடலூர் தலைநகரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. கடலூர் இப்பொழுதும் தலைநகரமாக இருந்தாலும்கூட, அங்கு ஒரு சிறு தொழிற்சாலைகூட இல்லை. தாங்கள் சொல்கின்ற* Haldia company *உள்ளிட்ட மற்ற தொழிற்சாலைகளெல்லாம் குறிஞ்சிப்பாடி தொகுதிக்குச் சென்றுவிட்டன. எங்களுடைய கடலூர் தொகுதியில் ஒரு சிறு தொழிற்சாலைகூட இல்லாத காரணத்தால், கடலூர் தலைநகரத்தில் ஒரு தொழிற்சாலை இருக்கிறது என்று நாங்கள் சொல்லிக்கொள்ளும்விதமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்துபேசி, தயவுகூர்ந்து கடலூருக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், ஆயிரம் பேராவது பணி செய்யக்கூடிய வகையில் ஒரு சிறிய தொழிற்சாலையையாவது அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அன்போடு கேட்டு, அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 மார்ச் 31

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 1984 ஆம் ஆண்டு துவங்கி, 1992, 1996 என மூன்று கட்டங்களில் கடலூரில் சிப்காட் மூலமாகத் தொழிற்சாலைகள் உருவாக்குவதற்கான நிலமனைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 78 நிறுவனங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, 50 நிறுவனங்கள் தற்போது தங்களுடைய பணிகளை அங்கே துவங்கியிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அது ஏற்கெனவே கடலூரில்தான் இருந்தது. இன்னும் சொல்லப்போனால், சிதம்பரம் போகிற வழியில் கடலூரிலிருந்து புவனகிரிக்கு வரக்கூடிய வழியில் தொடர்ச்சியாக இந்தத் தொழிற்சாலைகள் இருக்கின்றன.

முற்பகல் 10–20

Original ஆக அது கடலூர் தொகுதியில்தான் இருந்தது. தொகுதி மாறியதற்குப் பிறகு, தொகுதி சீரமைப்பு வரையறைக்குப் பிறகு, நம்முடைய அண்ணன் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் குறிஞ்சிப்பாடி தொகுதிக்கு அது வந்திருக்கிறதேயொழிய, இயற்கையாக கடலூரில்தான் இருந்தது. எனவே, அந்தப் பகுதியில் அமைகின்ற எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும், அது கடலூராக இருந்தாலும், குறிஞ்சிப்பாடியாக இருந்தாலும், ஒட்டுமொத்த கடலூர் மாவட்டத்திற்கும் பயன்படக்கூடிய அளவிலே அந்தத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. நம்முடைய தொழில் துறையைப் பொறுத்தமட்டில், புதிதாக துறையின் மூலமாகத் தொழிற்சாலைகளைத் துவங்குவதில்லை. யாரேனும் தொழில் முதலீட்டாளர்கள் தொழில் தொடங்க முன்வருவார்கள் என்று சொன்னால், அவர்களை ஊக்குவிப்பு செய்து, அவர்களுக்கான சிறந்த சலுகைகளை வழங்கி, தொழில்களைத் தொடங்குவதற்கான எல்லாவிதமான ஆதரவையும் தொழில் துறை அளிக்கும். எனவேதான் இந்தத் துறையை, தொழில் துறை என்பதை தொழில் முதலீட்டு ஊக்குவிப்புத் துறை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயர் மாற்றம் செய்திருக்கிறார்கள். இங்கே அவர் குறிப்பிடுவதைப்போல, பெரிய தொழில் நிறுவனங்கள் Haldia Petrochemicals Limited—ஏற்கெனவே அங்கே இருக்கக்கூடிய Nagarjuna Oil Corporation Limited நிறுவனத்தை NCLT மூலமாக அவர்கள் கையகப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் அங்கே அந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு ஆர்வம் காட்டுகிறார்கள்.

*2023 மார்ச் 31*]

அதுபோன்ற பெரிய தொழிற்சாலைகள், Aromatics Complex எல்லாம் வருவதாக இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அந்தப் பகுதியில் ஒரு சிறந்த தொழிற்சாலை வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன் அவர்கள்.

**திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் தொகுதியில் சவுக்கு மரங்கள், Eucalyptus மரங்கள் எல்லாம் அதிகமாக விளைகின்றன. தண்ணீர் குறைவாகப் பயன்படுத்தப்படும் 'பூ' தயாரிக்கும் தொழிற்சாலை, Textile Park, TIDEL Park அல்லது காகிதத் தொழிற்சாலை போன்று ஏதாவது ஒரு சிறு தொழிற்சாலையையாவது கடலூர் தொகுதிக்குத் தந்து உதவிடுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழிற்சாலைகள் அல்ல; பெரிய Petrochemical Complex வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதன் வாயிலாக அங்கே இரசாயன பொருட்கள், polymer பொருட்களையெல்லாம் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. ஏறத்தாழ 78 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாபெரும் Complex வருகின்றபோது, அவர் சொல்வதைப்போல, எல்லா இடங்களிலும் தொழிற்சாலைகள் வரும். மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள், அந்தத் தொழிற்சாலை அந்தப் பகுதியிலே வர வேண்டும்; அதனால் பலருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்று ஆர்வம் காட்டி, அவரும் சொல்லியிருக்கின்றார். எனவே, அதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 1990–1991 ஆம் ஆண்டிலே உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் ஆகிய இரண்டு வட்டங்களையும்

தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்து, அன்றைக்கு தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டார். அந்த அடிப்படையிலே தொடர்ந்து வாலாஜாபாத் வட்டத்திலே பல தொழிற்சாலைகள் உருவாகி, பல பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கின்றது. இப்போது திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில், உத்திரமேரூர் வட்டம், திருப்புலிவனம் கிராமத்தில் 600–க்கும் மேற்பட்ட அரசு நிலங்கள் இருக்கின்றன. அதிலே SIPCOT மூலம் தொழிற்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, SIPCOT நிறுவனம் இதுவரை 16 மாவட்டங்களில், ஏறத்தாழ 6 சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உள்ளடக்கி, ஏறத்தாழ 38,538 ஏக்கர் பரப்பளவிலே, 28 தொழிற் பூங்காக்களை உருவாக்கி, நிருவகித்து வருகிறது. பொதுவாக ஓர் இடத்திலே SIPCOT அமைய வேண்டுமென்று சொன்னால், அந்தப் பகுதி அடிப்படை தேவைகளான தண்ணீர், மின்சாரம், நில அமைப்பு, இரயில் போக்குவரத்து போன்ற பல்வேறு வசதிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அந்தப் பகுதியிலே தொழில்மனை தேவைகள் இருப்பதையும் கருத்தில்கொண்டு, SIPCOT பூங்காக்களை அமைப்பதற்கு அரசு முன்வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தப் பகுதிகளை ஏற்கெனவே நானும் ஒரு முறை அவருடன் சென்று பார்த்திருக்கிறேன். தொழிற்சாலைகளை அமைப்பதற்கு, SIPCOT–ஐ உருவாக்குவதற்கு அது உகந்த இடமாகவே இருக்கிறது என்பதை நானும் அறிவேன். எனவே, வரக்கூடிய காலங்களில் அங்கே ஒரு SIPCOT பூங்காவை உருவாக்குவதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்கள்.

**திரு. செல்லூர் கே. ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைக்கு எந்தவொரு தொழிலும் இல்லை. (சிரிப்பு) மதுரையில், Metro Rail திட்டம் செயல்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கான பூர்வாங்கப் பணிகளை எடுத்து

*2023 மார்ச் 31*]

*வருகிறார்கள். ஆனால், எந்தத் தொழிலும் இல்லாமல்* Metro Rail *திட்டம் வந்து என்ன செய்வது? ஒரு தொழிற்சாலை கூட குறிப்பிடும் அளவிற்கு இங்கு இல்லை. இப்போதுகூட, 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரையில்* Tidel Park *அமைக்கப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, எல்லோரும் பாராட்டுகின்ற அளவிற்கு, விரைவில் மதுரைக்கு ஏதாவது ஒரு தொழிற்சாலையைக் கொண்டு வர மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். மதுரை மக்கள் எல்லோரும் ஆஹா, ஓஹோ என்று மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு அவர்களைப் பாராட்ட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *10 வருடங்கள் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். ஒரு தொழில்கூட இல்லை என்று வருத்தப்படுகிறீர்கள். இந்த அமைச்சராவது தருவார்களா என்று பார்ப்போம். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10—25*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளபடியே மதுரை மக்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களே அண்ணனைப் பார்த்து ஆஹா, ஓஹோ என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு) நானே அசந்து போனேன். கொஞ்ச நாட்களுக்கு முன் ஒரு படம் வந்தது. அண்ணன் என்ன செய்தார்கள் என்றால், நாம் எல்லோரும் புலியைப் பார்த்தால், தூர ஓடிப்போய் விடுவோம். மதுரை மண்ணில் எல்லோரும் மாடுகளைத்தான் பிடிப்பார்கள்; நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால், மதுரை மண்ணுக்குரிய அந்த வீரம், அண்ணன் திரு. செல்லூர் ராஜூ அவர்கள், புலி வாலையே பிடித்துக் கொண்டு நின்றார். படத்தைப் பார்த்தால் தெரியும். புலி வாலைப் பிடித்தார். ஆனால் ஒன்று, மதுரைக்காரர்கள் மிகவும் விவரமாக இருப்பார்கள். புலியின் வாய் இருக்கின்ற பக்கம் நிற்காமல், அதன் வால் இருக்கின்ற பக்கம் சென்று அண்ணன் புலியின் வாலைப் பிடித்தார். அவ்வளவு திறமையாக இருக்கக்கூடிய அண்ணன் அவர்கள் நம்முடைய மதுரைக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்.*

*தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கு நாம் நிறைய முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டக்கூடிய காரணத்தினால்தான் மதுரைக்கு* Tidel Park, *ஏறத்தாழ*

600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மிகப் பெரிய அளவில் அது உருவாக வேண்டிய ஒரு நல்ல வாய்ப்பு. அதைப்போல, மதுரையில் ஒரு SIPCOT தொழிற்சாலை வருவதற்கும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தத் தொழில் முதலீடுகளைப் பொறுத்தவரையில் குறிப்பாக மதுரை, தூத்துக்குடியில் இருக்கக்கூடிய தொழில் வழித்தடம் Industrial Corridor–ஐ செம்மைப்படுத்தி, வரிசையாக நம்முடைய தென் மாவட்டங்களில் இந்தத் தொழில் மையங்கள் வரவேண்டும். சென்னை போன்ற நகரங்களில் தற்போது மிகவும் congestion ஏற்பட்டிருக்கிறது. ஒரு சமச்சீரான தொழில் வளர்ச்சி எல்லா மாவட்டங்களிலும் வரவேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். எனவே, இப்போது வந்திருக்கக்கூடிய முதலீடுகள் குறித்துப் பார்ப்போமென்று சொன்னால், அதிகமான முதலீடுகள் தென் மாவட்டங்களை நோக்கி வரத் தொடங்கியிருக்கின்றன. மதுரையும் நிச்சயமாக, அதில் மிகப் பெரிய முக்கியத்துவத்தைப் பெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**84—**

## கலையரங்கத்தைப் புதுப்பித்தல்

***3447—திரு. ப. கார்த்திகேயன்:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தொகுதி, வேலூர் மாநகராட்சியில் உள்ள அண்ணா கலையரங்கத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அண்ணா கலையரங்கத்தினை ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் அண்ணா பன்னோக்கு கலையரங்கமாக புதிதாக மாற்றியமைக்க மாண்புமிகு